TNTAM//25/A3587 Editor : T.STEPHEN MA.,

தினசுடர்

DINA SUDER

காலை நாளிதழ் TAMIL DAILY

KANNIYAKUMARI VOLUME: 01 ISSUE: 292 26.08.2026 WEDNESDAY PAGE: 4 RS: 5

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 290 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவில் 250 புதிய பேருந்துகளின் சேவையைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலாளர் சாய்குமார், போக்குவரத்துத் துறை செயலாளர் நிர்மல்ராஜ், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னையில்

புதிதாக 130 ஏசி மின்சார பேருந்துகள்!

முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்!!

சென்னை, ஆக.26 சென்னையில் புதிதாக 130 தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகள் சேவையை முதல்வர் விஜய் நேற்று தொடக்கி வைத்தார்.

சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கத்தில், சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் முதல் கட்டமாக ரூ.697 கோடி மதிப்பீட்டில் 625 தாழ்தள மின்சார பஸ்கள் வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூந்தமல்லி, சென்ட்ரல் பணிமனை மற்றும் தண்டையார்பேட்டை 1 ஆகிய 5 பணிமனைகளில் இருந்து இயக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2ம் கட்டமாக 750 புதிய தாழ்தள குளிர்சாதன மின்சார பஸ்கள் ஆலந்தூர், சென்ட்ரல் பணிமனை2, பெரம்பூர், பாடியநல்லூர், ஆவடி, கே.கே.நகர் மற்றும் அய்யப்பன்தாங்கல் ஆகிய 7 பணிமனைகளில் இருந்து இயக்கப்பட உள்ளது.

சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் நடைபெற்ற தொடக்க நிகழ்வில்கலந்துகொண்ட முதல்வர் விஜய், மொத்தம் 250 புதிய பேருந்துகளின் சேவைகளை தொடக்கி வைத்தார்.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்துக்காக ரூ. 134.50 கோடியில் வாங்கப்பட்ட 130 தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகளை முதல்வர் விஜய் கொடியசைத்து தொடக்கி வைத்த பின், பேருந்தில் ஏறி ஆய்வு செய்தார்.

இதேபோல், பல்வேறு மாவட்டங்களுக்காக ரூ. 55.58 கோடியில் வாங்கப்பட்ட 120 பேருந்துகள் சேவைகளும் தொடக்கி வைக்கப்பட்டது.

இந்த தொடக்க நிகழ்வில், போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரம்:

சட்டசபையில் எடப்பாடி பழனிச்சாமி பேச்சால், சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் ஆவேசம்!

இது என்ன பொதுக்கூட்டமா? என கேள்வி!!

சென்னை, ஆக.26 அதிமுகவில் இருந்து முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர், எம். ஆர். விஜயபாஸ்கர் உள்பட 6 பேர் ராஜிநாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்துள்ளனர்.

இதுபற்றி நேற்று பேரவையில் பேசிய அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "6 தொகுதிகளின் எம்எல்ஏக்கள் ராஜிநாமாசெய்துள்ளதால் அந்த தொகுதி மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் உள்ளது. அந்த பகுதியில் உள்ள பொறுப்பு அமைச்சரால் தொகுதி பிரச்னையை முழுமுமாக அறிந்துகொள்ள முடியாது என்பதால்தான் சட்டப்பேரவை உறுப்பினர் தேவை" என்றார்.

அவை முன்னவர் செங்கோட்டையன்: விரைவாக தேர்தல் நடத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆர்வம். அதில் மாற்றுக்கருத்து இல்லை. அதிலும் நாங்கள் வெற்றி பெறுவோம். அத்தனை பேரும் வெற்றி பெறுவார்கள். அதிலும் மாற்றுக்கருத்து இல்லை.

பேரவைத்தலைவர்: நீங்கள் (எடப்பாடி பழனிச்சாமி) சொன்னதெல்லாம் வழக்கில் இருக்கிறது. அதை அவைகுறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

அப்போது, எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது மைக் அணைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

அவை முன்னவர் செங்கோட்டையன்: எடப்பாடி தொகுதியில் தவெக வேட்பாளர் வாபஸ் பெற்றது குதிரை பேரம் இல்லையா? எடப்பாடி பழனிச்சாமி : அவரது மனுதள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அவர் வாபஸ் பெறவில்லை. ஒரு கட்சியில் இருந்து வெற்றி பெற்றுவிட்டு ராஜிநாமா செய்துவிட்டு ஏன் தவெகவில் சேர வேண்டும்?

தொடர்ந்து, எடப்பாடி பழனிச்சாமி," அவை மரபை மீறி சத்தமாக பேசவே, உடனே பேரவைத் தலைவர் 'இது என்ன பொதுக்கூட்டமா? இங்கு என்ன பொதுக்கூட்டமா நடத்துகிறோம்? முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உணர்ச்சிவசப்படாமல் பேச வேண்டும். உங்கள் உடலை வருத்திக்கொள்ளக்கூடாது என்று சொல்கிறேன். ' என்று ஆவேசமாகப் பேசினார்.

முஸ்லிம் தீவிரவாதி என கூறினர் என்ற

த.வெ.க எம்.எல்.ஏ. பேச்சுக்கு தி.மு.க. எதிர்ப்பு!

சட்டசபையில் கடும் அமளி!!

சென்னை, ஆக.26 முஸ்லிம் தீவிரவாதி என கூறினர் என்று பேசிய த.வெ.க, எம்.எல்.ஏ. வுக்கு தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் சட்டசபையில் நேற்று கடும் அமளி ஏற்பட்டது.

தமிழக சட்டசபையில் நேற்று மானிய கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. இதில் த.வெ.க உறுப்பினர் முஸ்தபா கலந்துக் கொண்டு பேசினார். அவர் பேசும் போது உனக்கெல்லாம் வாய்ப்பு கிடைக்குமா? உன்னால எம்.எல்.ஏ. ஆக முடியுமானு நிறைய பேரு கேட்டாங்க. இப்போது நான் த.வெ.க. ஆதரவுடன் எம்.எல்.ஏ ஆகி இருக்கிறேன்.

இஸ்லாமியர்கள் 13 பேருக்கு தேர்தலில் போட்டியிட விஜய் வாய்ப்பு கொடுத்தார்; இஸ்லாமியர்களின் பாதுகாவலர்கள் என தி.மு.க.வினர் கூறிக் கொள்வர். ஆனால் முஸ்லிம் தீவிரவாதி என அவர்கள் 5 முறை பேசியுள்ளனர் என்றார்.

அதைத் தொடர்ந்து, த.வெ.க எம்.எல்.ஏ முஸ்தபா பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க எம்.எல்.ஏக்கள் எழுந்து நின்று ஒரே நேர த்தில் பேசினார்கள். இதனால் சபையில் கடும் அமளியும், அதைத் தொடர்ந்து கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. அப்போது குறுக்கிட்டு, சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகர் சமாதானம் படுத்தினார்.

பின்னர், முஸ்தபா பேசுகையில்," எங்கள் சமூகத்தை தீவிரவாதி என கூறினால் கஷ்டமாக இருக்காதா. கட்சி ஆரம்பித்து இரண்டரை ஆண்டுகளில் ஆட்சியை பிடித்த ஒருவர் என்றால் அது வெற்றி தலைவர் தமிழக முதல்வர் விஜய் தான். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழாவிற்கு முதலமைச்சர் விஜய் வரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கர்நாடகாவில் வனப்பகுதியில்

3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கு சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றம்!

பிரேத பரிசோதனை அறிக்கையில் அதிர்ச்சி தகவல்கள்!!

பெங்களூர், ஆக.26 கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்களும் அருகில் இருந்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெரிய வந்துள்ளது. இதனால் இந்த வழக்கை சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றி கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் மாவட்டம் ஹனூர் அருகேயுள்ள காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15ம் தேதி அதிகாலையில் அந்தோணிசாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), லாசர் டேவிட் குமார் (33) ஆகிய மூவரும் வனத்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஹனூரில் பாதிக்கப்பட்டோரின் உறவினர்களும், கிராமத்தினரும் போராட்டத்தில் குதித்ததால் பதற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து வனத்துறை நிர்வாகம், 'மான் வேட்டையாட சென்ற மூவரும் வனத்துறையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். தங்கள் உயிரைக் காப்பாற்றி கொள்வதற்காக வனத்துறையினர் திருப்பி சுட்டதால் மூவரும் உயிரிழந்தனர்' என்று தெரிவித்தனர். இதை உறவினர்கள் ஏற்கவில்லை. இந்தச் சம்பவத்துக்குத் தமிழக முதல்வர் விஜய், முன்னாள் முதல்வர்கள் மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தமிழக அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதுகுறித்து விசாரணை நடத்த கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் உத்தரவிட்டார். அதன்பின், வனத்துறையினர் 7 பேர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

'புதிய காலணி' இதற்கிடையில் 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட ஷாக்யா வனப்பகுதியில், கொள்ளேகால் துணை ஆணையர் தினேஷ் குமார் மீனாதலைமையில்போலீஸாரும், வனத்துறை அதிகாரிகளும் ஆய்வு மேற்கொண்டனர்.

அங்கு சிதறிக் கிடந்த பொருட்களைச் சேகரித்தனர். வனத்துறை ஊழியர்கள் ஷிவராஜ், சேகரையா, அனில்குமார் உள்ளிட்ட 7 பேரையும், இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிர்த்தப்பிய மகிமை தாஸையும் துணை ஆணையர் தினேஷ் குமார் மீனா விசாரித்தார்.

மேலும், கொல்லப்பட்ட 3 பேரிடம் இருந்து 2 நாட்டுத்துப்பாக்கிகள், 3 கத்திகள், 2 செல்போன்கள், கட்டிங் பிளேயர், ஸ்குருடிரைவர், 2 பைகள், வெங்காயம், தக்காளி, சமையல் பாத்திரங்கள், 2 பைகளில் மான் இறைச்சி, ஒரு ஜோடி ஹவாய் செருப்பு ஆகியவற்றை கைப்பற்றியதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், வனத்துறை வெளியிட்ட புகைப்படத்தில் இடம் பெற்ற, ஸ்டிக்கர் பிரிக்காத புதிய காலணி பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அந்தோணிசாமியின் மனைவி லூர்து மேரி, 'இரவெல்லாம் காட்டில் அலைந்தவரின் செருப்பில் மண் கூட ஒட்டி இருக்காதா?' என்று கேள்வி எழுப்பினார்.

இந்த வழக்கின் நேரடி சாட்சியான மகிமை தாஸ், "வனத்துறையினர் மிகவும் அருகில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். மலைப்பகுதியில் இருந்து கீழே குதித்து உயிர் தப்பினேன். என்னை வனத்துறையினர் விசாரணைக்கு அழைத்து, சாட்சி சொல்லவைக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் சொல்வதைப் போல சொல்லாவிட்டால், என்னை வழக்கில் சிக்கவைத்து விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. எனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது" என்று வீடியோ வெளியிட்டு கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சூழ்நிலையில், கொல்லப்பட்ட 3 பேரின் பிரேதப் பரிசோதனை கடந்த 16ம் தேதி மைசூருவில் உள்ள கே.ஆர். அரசு மருத்துவமனையில் நடத்தப்பட்டது. பிரேதப் பரிசோதனை அறிக்கையில், "இறந்த 3 பேரும், 10 அடிக்குக் குறைவான தூரத்தில் இருந்து சுடப்பட்டுள்ளனர்.

ஜான் ரோஸ் பீட்டரின் இடது காது பகுதியில் இருந்து மார்பு பகுதி வரை சுமார் 28 செ.மீ. நீளத்துக்கு ஆழமான காயம் ஏற்பட்டுள்ளது.

அந்தோணிசாமி, லாசர் டேவிட் குமார் ஆகியோரின் வலது மார்பு, தொடை ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. லாசட் டேவிட் குமார் உடலில் வலது மார்புப் பகுதியில் 8.5 செ.மீ. வலது தொடையில் 13 செ.மீ. ஆழத்துக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மிக அருகாமையில் இருந்து சுடப்பட்டது உறுதியாகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கர்நாடக காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (டிஜி அண்ட் ஐஜிபி) சலீம், "மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கு சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்படுகிறது" என்று நேற்று உத்தரவிட்டார்.

இதையடுத்து துணை காவல் ஆணையர் தினேஷ் குமார் மீனா தலைமையிலான விசாரணைக் குழுவின் அறிக்கைகள் சி.ஐ.டி. போலீஸாருக்கு அனுப்பப், சாம்ராஜ் நகர் காவல் கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருவள்ளூர் அருகே பட்டப்பகலில் பயங்கரம்:

வாலிபர் சரமாரி வெட்டிக்கொலை!

காரில் வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் வெறி செயல்!!

திருவள்ளூர், ஆக.26 திருவள்ளூர் அருகே குற்ற வழக்கில் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்ற வாலிபர் நேற்று பட்டப் பகலில் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார். காரில் வந்த 5 பேர் கொண்ட கும்பல் வெட்டி சாய்த்து விட்டு தப்பமுயன்ற போது கார் வீட்டின் சுவர் மீது மோதியதில் பொதுமக்கள் விரட்டி பிடித்துகொலைகார கும்பலைச் சேர்ந்த 3 பேரை காவல் நிலையத்தில் ஒப்படைத்ததால் பரபரப்புநிலவியது. மற்ற இருவர் தப்பி ஓடிவிட்டனர்.

திருவள்ளூர் ஒன்றியம் சிட்டத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் மாரி (எ) ரூபன் (வயது 33). இவர் மின்வாரிய அதிகாரிகளிடம் தகராறு செய்த வழக்கில் அண்மையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார். இந்த வழக்கில்நிபந்தனை ஜாமீனில் வெளி வந்த மாரி இவ்வழக்கு தொடர்பாக வெங்கல் காவல் நிலையத்தில் கடந்த மூன்று தினங்களாக கையெழுத்து இட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று காலை 11 மணி அளவில் கையெழுத்திட வெங்கல் காவல் நிலையத்திற்கு சென்றுள்ளார். காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வெங்கலிலிருந்து தாமரைப்பாக்கம் கூட்டு சாலைக்கு தனது மோட்டார் சைக்கிளில் நண்பர் வெங்கடேஷ் என்பவர் உடன் சென்று கொண்டிருந்தபோது இதே காவல் நிலையை எல்லைக்கு உட்பட்ட பாகல்மேடு என்ற இடத்தை கடந்த போது ஒரு காரில்வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் மாரி ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில் நிலை தடுமாறி மாரி கீழே விழவே காரில் இருந்த அந்த ஐந்து பேரும் அறிவாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் மாரியை நோக்கி ஓடி உள்ளனர். இதை அறிந்த மாரி அவர் களிடமிருந்து தப்பிப்பதற்காக சிறிது தூரம் ஓடி உள்ளார். அந்த கும்பல் மாரியைகண் இமைக்கும் நேரத்திற்குள் சுற்றி வளைத்து அறிவாளால் சரமாரியாகவெட்டி கொலை செய்து விட்டுஅந்த கும்பல்மீண்டும் வந்த காரிலேயே தப்பிச்செல்லும் போது பாகல்மேடு வளைவில் உள்ள ஒரு வீட்டின் சுவரில் மோதி நின்றது. இதைக் கண்ட அந்தப் பகுதி பொதுமக்கள் அந்த கும்பலை சுற்றி வலைத்தனர்.

இதில் 3 பேர் பொதுமக்களிடம் சிக்கிக் கொண்டனர். மற்ற இருவர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். பொதுமக்களிடம் சிக்கிய கொலை செய்த கும்பலைச் சேர்ந்த 3 பேரை பொதுமக்கள் வெங்கல் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் சினிமா காட்சிகளை மிஞ்சும் அளவிற்கு நிகழ்ந்துள்ளது.

இதுகுறித்து வழக்கு பதிவு செய்துள்ள வெங்கல் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கொலை செய்யப்பட்டு கிடந்த மாரி (எ) ரூபன் சடலத்தை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பிடிபட்ட மூன்று பேரிடமும் மாரி எதற்காக கொலை செய்யப்பட்டார் போன்ற காரணம் குறித்து துருவி, துருவி காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கொலை செய்யப்பட்ட மாரி (எ) ரூபன் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதாக காவல்துறை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெங்கல்காவல்நிலையை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒரே மாதத்தில் 2 படுகொலை நடந்துள்ளதுள்ளது குறிப்பிடத்தக்கது.

கோவில்பட்டி கடலைமிட்டாய் விலையை 25% உயர்த்த முடிவு!

கோவில்பட்டி, ஆக.26 மூலப்பொருட்கள் விலை உயர்வு காரணமாக கடலை மிட்டாய் விலையை 25 சதவீதம் உயர்த்த உற்பத்தியாளர்கள் முடிவெடுத்துள்ளனர்.

கோவில்பட்டி கடலைமிட்டாய்கள் உலகப் பிரசித்தி பெற்றதாகும். இந்த கடலை மிட்டாய்கள் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்கு கடந்த 2020ம் ஆண்டு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

இந்நிலையில், கோவில்பட்டி கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதுகுறித்து, சங்கச் செயலாளர் கண்ணன் கூறியதாவது: நிலக்கடலை, வெல்லம், ஏலக்காய் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. பேக்கிங் கவர்களின் விலையும் அதிகரித்துள்ளது. 80 கிலோ நிலக்கடலை மூட்டை கடந்த 3 மாதங்களுக்கு முன்பு ரூ.9,680 என விற்பனையானது. தற்போது ரூ.12,500க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.1,300 என இருந்த 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் வெல்லம் விலை தற்போது ரூ.2,600 ஆக விலை உயர்ந்துள்ளது.

எனவே மூலப் பொருட்களின் விலை ஏற்றத்தை தற்போதைய விலையிலிருந்து 25 சதவீதம் உயர்த்துவது என முடிவெடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.